**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 108** **நாள்: 31.07.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5க்குட்பட்ட பகுதியில் சுமார் ரூ.10இலட்சம் மதிப்பிலான 8.5 டன் எடை கொண்ட நெகிழிகள் (PLASTIC) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி பறிமுதல் .**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110ன் கீழ் 50 மைக்ரான் தடிமனுக்கு கீழுள்ள பயன்பாட்டு நெகிழி (PLASTIC) பைகள் தயாரித்தல், கொண்டு செல்லுதல், இருப்பு வைத்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துவதற்கு முற்றிலும் தடை செய்யப்படுகிறது என அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஆணைக்கிணங்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்- 5 க்குட்பட்ட பகுதியிலுள்ள நெகிழி மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் ஆகியோர்களுக்கு கடந்த 19.07.2018 அன்று நெகிழி கையாளுதல் மற்றும் மேலாண்மை விதிகள் குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் 50 மைக்ரான் தடிமனுக்கும் கீழுலுள்ள நெகிழி பைகள் மற்றும் இதர நெகிழி பைகள் பயன்படுத்த கூடாது என அறிவுறுத்தப்பட்டன. அதன் அடிப்படையில் இன்று 31.07.2018 கூடுதல் மாநகர நலஅலுவலர்கள் தலைமையில் கோட்டம் – 57 வ. .உ. .சி சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் அமைந்துள்ள A 1 மாதேஸ்வரா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்ட போது தடை செய்யப்பட்ட 50 மைக்ரான் தடிமனுக்கும் கீழுள்ள நெகிழி பை கட்டுகள் 142 எண்ணிக்கைகள் பறிமுதல் செய்து ஆய்வு மேற்கொண்டதில் இவையனைத்தும் 20 முதல் 30 மைக்ரான் தடிமன் மட்டுமே உள்ளது எனவும் ஆனால், லேபிளில் 51 மைக்ரான் என சீலிடப்பட்டது எனவும், கண்டறியப்பட்டது. உடனே 8.5டன் எடை கொண்ட ரூ. 10லட்சம் மதிப்பிலான 142 கட்டுகள் கொண்ட நெகிழி பைகள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -5 சுகாதாரத்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் வியாபாரிகள் 50 மைக்ரான் தடிமனுக்கு கீழுள்ள நெகிழிகள் விற்பனை மற்றும் பயன்படுத்துதல் கூடாது என்றும் மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**